Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# தேவாங்கர் குல தோற்றமும் பெயர்க் காரணமும்

**அ.வி.ரா கணேஷ்குமார்**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முன்னுரை:**

சென்ாட் என்னும் பிரெஞ்சு நாட்டு வல்லுநர் கூற்றுப்படி ஒரு குறுகிய ஆட்சி மன்றம் கோட்பாட்டளவில் எல்லா வகையிலும் வாழையடி வாழையாகக் கண்டிப்புடன் இயங்குவது. தலைவர் ஒருவரையும் ஒரு ஆலோசனைக் குழுவையும் தன்னகத்தே கொண்டு மரபு வழியில் தன்னிச்சையாகச் செயல்படும் அமைப்பு. ஏறத்தாழ நிறைந்த அதிகாரம் கொண்ட பேரவையாகக் கூட்டுவது குறிப்பிட்ட சில திருவிழாக்களின் போது ஒன்று சேர்வது மணவிழா, உணவு தீட்டு சம்பந்தப்பட்ட சடங்குகள் தொடர்புடைய அதிகார வரம்புகளை வரையறை செய்யும் பொது அலுவல்களாகல் பிணைக்கப்பட்டிருப்பது பலதரப்பட்ட கட்டளை வரம்புகளை நிர்ணயிப்பது மூலம் தன் உறுப்பினர்களை ஆள்வது: தண்டனைகளை விதிப்பதன் மூலம் மாற்ற முடியாத வண்ணம் தன் உறுப்பினர்களைத் தம் கூட்டத்திலிருந்து நீக்கி வைக்கும் பெருந்தண்டளை விதிக்கும் அளவு வரை சென்று தன் அதிகாரத்தை உணர்ததுவது இது தவிர நெஸ்பீல்டு என்பதாகும். சர்.எச்.ரிஸ்லி என்பவரும் டாக்டர்.கெட்கர் என்பவரும் சாதி என்பதற்கு இலக்கணம் தந்துள்ளனர்.

தமிழகத்தைப் பொறுத்த வரை மூவேந்தரின் ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ் பேசும் ஜாதி மக்களே அதிக அளவில் வாழ்ந்து வந்தனர். விஜயநகர பேரரசின் ஆதிக்க காலத்தில் தான் தெலுங்கு பேசும் மக்களும் கன்னடம் பேசும் மக்களும் தமிழ்நாட்டில் அதிக அளவில் குடியேறி வசிக்க தொடங்கினர். அவ்வாறு தமிழகத்தில் குடியேறிய கன்னடம் பேசும் மக்களுள் தேவாங்கர் குலத்தவர் அடங்குவர். இக்குல மக்கள் தென் தமிழகத்தில் குடியேறிய காலம், பெயர்க்காரணம், தோற்றம் குறித்து இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.

**தென் தமிழகத்தில் குடியேறிய காலம்:**

இக்குல மக்கள் தமிழ்நாட்டில் குடியேறிய காலம் குறித்து சரியாக தெரிந்து கொள்ள முடியவில்லை ஆனால் தென் தழிழகத்தில் கி.பி 15, மற்றும் 16 ஆம் நூற்றாண்டிலேயே குடியேறியதற்கான ஆதாரம் கிடைத்து உள்ளது. குறிப்பாக மீனாட்சி அம்மன் கோவில் சுவர் கல்வெட்டு மற்றும் ஓ.கோவில்பட்டி செப்பேடும் இம்மக்களின் குடியேற்றம் குறித்து தெளிவாக அறிய முடிகிறது.

**மீனாட்சி அம்மன் கீழ் கோபுர கல்வெட்டு**:

"மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவிலின் கீழ்க்கோபுரச் சுவற்றில் கி.பி.1579ம் ஆண்டு கல்வெட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழ்ந்த தேவாங்கர்களுக்கு வரித்தள்ளுபடி செய்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**ஓ கோவில்பட்டி செப்பேடுகள்:**

"திம்மி செட்டியும், காரமல்லி செட்டியும் சேர்ந்து, சாதி வாரியாக வசூலித்த பொன் 7000, திருமண வரி மற்றும் பிற இனங்களில் வசூலித்த பொன் 5400 அவையனைத்தையும் கொண்டு மதுரைச் சொக்கநாதருக்குக் கட்டளை ஏற்படுத்தி அக்கோயிலில் கல்வெட்டு வெட்டி நற்பணி புரிந்தமைக்காக அவ்விருவர்க்கும் குற்றசட்டம் நிர்வகிக்கும் உரிமையையும் கோயிலில் பஞ்சாட்சரம், வெற்றிலை, பாக்கு சந்தனம் ஆகியவை முதலில் பெறும் மரியாதையினையும் வழங்கியதை இச்செப்பேடு தெரிவிக்கிறது.

**பெயர்க்காரணம்:**

தேவாங்கர் தெய்வம் + அங்கம் அதாவது எம்பெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தேவலர் தோன்றியதால் இவருக்கு தெய்வம் அங்கம் என வழங்கப்பட்டது. காலப் போக்கில் இச்சொல்லே தேவாங்கர் என பெயர் மாற்றம் பெற்றது.

**தோற்றம்:**

இக்குலத்தின் தோற்றம் குறித்து நமக்கு பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக புலவர் ம. கருஷ்ணமூர்த்தி எழுதிய தேவாங்கர் சிந்தாமணி என்ற நூலும் எட்கர் தர்ஸ்டன் எழுதிய தென் இந்திய குலங்களும் குடிகளும் என்ற நூலம் இக்குல மக்களின் தோற்றம் குறித்து எடுத்துரைக்கிறது.

**தேவலர் தோற்றம்:**

“தேவலப் பிரம்மம்” சிவபிரான் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிவந்து ஆடையும் , பூணூலும் நெய்து தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தந்து வந்தார். ஒரு முறை காண்டரிஷிக்கு மட்டுமே ஆடை கொடுக்கவில்லை. காண்டரிஷி தேவலரே எனக்கும் ஆடையும், பூணாலும் வேண்டும் எனக் கேட்டார். ஆனால் தேவலரோ உமக்கு நாளைக்குத் தருகின்றேன் இன்று இல்லையெனக் கூறினார். காண்டரிஷி கடுங்கோபம் கொண்டு இல்லையென்றதால் நீா மானுடயோனியில் பிறப்பீர் எனச் சாபம் இட்டார். இச்சாபத்தால் தேவலர் மானுட உருவில் ஏழு அவதாரங்கள் எடுத்து ஆமோத நகரை அரசாட்சி செய்தார்.

காண்டரிஷியின் சாபத்தால் தேவலபிரம்ம.

1. தேவலர்
2. வியாதரர்
3. ஷ்பதந்தன்
4. வேதாள மகரிஷி
5. வுரரிஷி
6. தேவசாலி
7. தேவதாசமய்யன்

என்னும் ஏழு அவதாரங்களை எடுத்தார் என்பதனை நம்மால் ஆய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**காலசேனன் தோற்றம்:**

“தேவலர் தேவதாசமய்யன் என்னும் பெயரில் இறுதி அவதாரம் எடுத்து ஆமோத நகரை அரசாட்சி புரிந்து வந்தார். இவர் வழிவந்த :கோராமர்” மகன் “உருத்திரன்” உருத்திரனுக்குப் பின் அவர் மகன் “காலசேனன்” ஆமோதநகர் அரசாட்சியை ஏற்று கலிங்க நாட்டு மன்னன் மகள் துர்களையை மணம் பரிந்தான் . காலசேனன் வம்ச விருத்தி இன்றி பத்தாயிரம் பெண்களை மணந்தான். புத்தாயிரம் பெண்களை மணந்தும் வம்ச விருத்தி இன்றி மிகவும் வருந்தினான். வருந்திய காலசேனன் கௌதம மகரிஷியைக் கொண்டு புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்தான். யாகத்தின் பலனால் பத்தாயிரம் குழந்தைகள் பிறந்தன தக்க பருவம் வந்தவுடன் இப்பத்தாயிரம் குழந்தைகளுக்கும் ஏழுநூறு மகரிஷிகளைக் கொண்டு உபதேசம் முதலிய தீட்சைகளைச் செய்தான். ஏந்தெந்தக் குழந்தைகளுக்கு எந்தெந்த மகரிஷி தீட்சை செய்தாரோ அக்குழந்தைகளஅந்தந்த மகரிஷியின் கோத்திரங்கள் ஆயினர்”

**எட்கர்தர்ஸ்டன் கூற்று:**

தென்னிந்தியக் குலங்களும், குடிகளும் என்ற நூலில் ‘எட்கர் தர்சஸ்டன் தேவாங்கர் பற்றிய செய்திகளைக் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார். “பிரமன் இந்த உலகில் உயிர் உள்ளனவற்றையும் உயிர் அற்றனவற்றையும் படைத்த போது தேவர், அரசர், மக்கள் ஆகிய அனைவரும் தங்களடைய உடலை மறைக்க உரிய ஆடை இல்லாதவர்களாவே இருந்தனர். இந்நிலையைக் கண்ட நாரதர் மிகுந்த மனவேதனை அடைந்து, பரமசிவனிடம் சென்று மூவுலகிலும் வாழ்பவர்களின் நாணமற்ற இழிநிலையினை எடுத்துக்கூறி. ஆதனை போக்க ஒரு வழி காணும்படி வேண்டி வணங்கினார். நாரதரின் வேண்டுகோளினை நிறைவேற்ற வேண்டுமென எண்ணமிட்டபடி இருந்த போதே அவர் உடலிலிருந்து ஓர் ஆண்மகன் தோன்றினான். அவன் பிறப்பினைக் குறிக்கும் வகையில் பரமசிவன் அவனுக்கு “தேவ அங்கம்” எனப்பெயரிட்டார். தேவ அங்கம் தன்னைக் படைத்தவரை வணங்கித்

தன்னை படைத்ததற்கான காரணத்தை கூறும்படி வேண்டினான். அதற்கு அவர் பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள ஸ்ரீ மகா விஷ்ணுவிடம் சென்றால் என்ன செய்ய வேண்டும் என அவர் கூறுவர் எனப் பதிலளித்தார் தேவ அங்கமும் ஸ்ரீ மகா விஷ்ணுவை அடைந்து பரமசிவனைப் பணிந்த விவரத்தைக்கூற அவர் நீ உலகத்தவர் உடலை மறைக்க உடையினை நெய்வாயாக எனக் கூறித் தன் நாபியிலிருந்து வளர்ந்துள்ள தாமரையின் தண்டிலிருந்து கொஞ்சம் நூலினை எடுத்து அதனை எவ்வாறு துணியாக்குவது என அவனுக்குக் கற்றுத்தந்தார். தேவ அங்கம் அதன்படி அவர் கொடுத்த நூலினை ஆடையாக்கி அதனை அவருக்கு வழங்க அவரும் அதனை ஏற்றுக் கொண்டு மரங்களிலிருந்து நாரினை எடுத்து தேவ உலகத்தவர்களுக்கு உடைகள் தயாரிக்கும் படி கூறினார். தேவ அங்கம் பத்தாயிரம் நெசவாளர்களைப் படைக்க அவர்கள் காடுகளுக்குச் சென்று மரங்களில் நாரினைஎடுத்துத் தேவர்களுக்கும் மக்களுக்கும் ஆடை நெய்யத் தொடங்கினர். ஒரு நாள் தேவஅங்காரமும் அவனைச் சார்ந்தவர்களும் பூலோகத்திலுள்ள காடுகளிலும் மரங்களில் நாரெடுக்கச் சென்ற போது அசுரர்கள் அவர்களைத் தாக்கத் தொடங்கினர். அதனால் கடுஞ்சினமுற்ற தேவ அங்கம் சீறி எழுந்து, தன் தலைமுடியினைச் சுழற்றி தரையில் ஓங்கி அடித்தார். அப்பொழுது எட்டு கரங்களில் படைக்கலன்களைத் தாங்கியவளாக சக்திதேவி பூமியிலிருந்து வெளிபட்டு அசுரர்களைத் தாக்கி அழித்தாள் தேவ அங்கம் தன்சடை முடியிலருந்து வந்த அவளுக்கு 'சௌடேசுவரி' எனப் பெயரிட்டு தன் இனத்தவர்களைக் காக்க அவளைத் தன் குலதெய்வமாக்கிக் கொண்டான். என தேவாங்கர் குலத்தொற்றம் பற்றிக் கூறியுள்ளார்.

இப்புராணக்கதை மூலம் காலசேனனின் தோற்றம் பற்றியும், அவர்களின் (தேவாங்கர்) சமூகத்தில் எழுநூறு கோத்திரங்களும், பத்தாயிரம் குலங்களும் உள்ளதாக அறிய முடிகிறது. இந்த பத்தாயிரம் குழந்தைகளின் வழிவந்தவர்களே “தேவாங்கர்“ என அழைக்கப்பட்டனர்.

**பக்தவச்சல பாரதியின் கூற்று:**

பக்தவச்சல பாரதி சாதிகளின் தோற்றம் குறித்த தொன்மைக் கதைகளில் “ மனு என்பவர் மனித இனத்தவர்க்கு ஆடைகள் உண்டாக்க முதன் முதலில் படைக்கப்பட்டடார். அவருக்குப்பின் தேவலன் என்ற முனிவர் இறைவனின் இதய கமலத்திலிருந்து தோன்றி ஏழு பிறவிகள் எடுத்தார். முதலில் அபிமானி. உதித்துமானி என்ற இரு பெண்கள் பருத்திச் செடிகளாக மாற்றப்பட்டனர். இச்செடிகளின் பருத்தியிலிருந்து தேவலன் முனிவர் ஆடை நெய்து மண்ணுலகில் பலருக்கும் கொடுத்தார். ஒரு கட்டத்தில் இம்முனிவருக்கும் அசுரர்களுக்கும் சண்டை மூண்டபோது முனிவரின் இதயக் கொடி அசுரர்களிடம் அவர்களுக்கும் நெசவுத் தொழிலைக் கற்றுக் கொடுத்தார். இந்த தேவலன் என்ற முனிவர் பெயரிலிருந்து தேவாங்கர் என்ற பெயர் தோன்றியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

**ந.சி கந்தையா பிள்ளை அவர்களின் கூற்று:**

ந.சி. கந்தையா பிள்ளை அவர்களும் தனது தென்னிந்திய குலங்களும், குடிமகளும் என்ற நூலில் சென்னை மாகாணத்தில் காணப்படும் தெலுங்கு மற்றும் கன்னட மொழிபேசும் நெசவு தொழிலாளர்களை தேவாங்கர் எனக் குறிப்பிடுகிறார். மேலும் கோயம்புத்தூர் பகுதியில் இம்மக்கள் செட்டுக்காரன் என அழைக்கப்படுகிறார்கள்.

**முடிவுரை:**

மேற்குறிப்பிட்டுள்ளவைகளில் இருந்து தேவாங்கர் குல மக்கள் தென் தமிழகத்தில் குடியேறிய காலம், பெயர்க்காரணம், மற்றும் இக்குல மக்களின் தோற்றம் குறித்து விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

**நூல் பட்டியல்:**


1. டாக்டர் B.R அம்பேத்கர், இந்தியாவில் சாதிகள், அமோசன் கிண்டல் வெளியீடு,
2. முனைவர் செ.வீரலட்சுமி, அருப்புக்கோட்டை தேவாங்கர் சடங்குகளும் விழாக்களும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் முனைவர் பட்ட ஆய்வேடு,

3. முனைவர் சொ..சாந்தலிங்கம், தேவாங்கர் வாழ்வும் வழிபாடும், பிரபு வெளியிட்டகம்,
4. புலவர் ம. கிருஷ்ணமூர்த்தி, தேவாங்க சிந்தாமணி, தேவாங்கர் புத்தக வெளியீட்டு டிரஸ்ட், சேலம்.
5. ஆங்கில மூலம்: எட்கர் தர்ஸ்டன் தமிழாக்கம்: முனைவர் க. ரத்னம் தென்னிந்தியக் குலங்களும், குடிகளும் தொகுதி - இரண்டும். தமிழ் பல்கலைக் கழகம் - வெளியீடு,
6. பக்தவச்சல பாரதி,தமிழர் மானுடவியல் பாரதி வெளியிட்டகம் வெளியீடு,
7. ந.சி கந்தையா பிள்ளை, தென்னிந்தியக் குலங்களும், குடிகளும் சுருக்கப்பட்ட பதிப்பு அமேசன் கிண்டல் வெளியீடு,